தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 95/பேரூ/2022

நாள் 24.09.2022

திரு. N. சுவாமிநாதன்,
வலங்கைமான், திருவாரூர் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வலங்கைமான் பேரூராட்சி, திருவாரூர் மாவட்டம் ... எதிர்மனுதாரர்

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் அஞ்சல், எண்.14, குடந்தை சாலை, வலங்கைமான் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. N. சுவாமிநாதன் என்பவரின் 15.06.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.06.2022ல் பெறப்பட்டு, 95/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் அஞ்சல், எண்.14, குடந்தை சாலை, வலங்கைமான் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. N. சுவாமிநாதன் தமது 15.06.2022 நாளிட்ட புகார் மனுவில் வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் பேரூராட்சிக்குச் சொந்தமான இராமன் தோப்பு குட்டையில் (சர்வே எண்.700/21) உள்ள ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், எனவே இது குறித்து விசாரணை மேற்கொண்டு ஆக்கிரமிப்புகளை அகற்றிட ஆணையிடக்கோரி புகார் மனு அளித்துள்ளார். மேலும், தமிழ்நாடு நீர்நிலைகள் பாதுகாப்புச் சட்டம் 2007, ஆக்கிரமிப்புகளை அகற்றல் கீழ் தமிழ்நாடு அரசு அரசாணை எண்.540–ன்படி கடந்த 02.05.2022ல் மனுதாரரும் அவருடைய தாயார் திருமதி என். அனுசுயா நடராஜன் என்பவரும் முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு புகார் மனுவினை இணையவழி மூலமாக அனுப்பியதாகவும், அம்மனுவின் மீது வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள பதிலறிக்கையில், மனுதாரரின் கோரிக்கை (புகார்) ஏற்கப்பட்டதாக கண்துடைப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், உண்மையான வரிசைப்பட்டியல் விவரம் பேரூராட்சி நிர்வாகத்தினால் தமக்கு வழங்கப்படவில்லை என்றும், பல

ஆக்கிரமிப்புகளை அகற்றிட நோட்டீஸ் அனுப்பவில்லை என்றும், மனுதாரராகிய தான் பொதுவழிப்பாதை (நீர்நிலைப் புறம்போக்கு) விவரங்களை வருவாய்த் துறை மூலமாக தெளிவுபடுத்தியுள்ளதாகவும், திருக்கோயில் நிர்வாகத்தின்கீழ் வசிக்கும் (கோயில் மனை ஆக்கிரமிப்பாளர்களை பேரூராட்சிக்குச் சொந்தமாய் உள்ள இராமன் தோப்பு குட்டை (சர்வே எண்.700/21) பகுதியிலிருந்து வெளியேற்ற திருக்கோயில் நிர்வாகத்தினை ஒருங்கிணைத்து செயல்படவில்லை என்றும் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளார். எனவே, ஆக்கிரமிப்புகளை அகற்றிட அரசாணையின்படி வெளிப்படைத் தன்மை ஏதும் நடவடிக்கைகளில் இல்லை என்றும், எனவே, உரிய விசாரணை மேற்கொண்டு பாரபட்சமற்ற ஆக்கிரமிப்பு அகற்றிட வலங்கைமான் பேரூராட்சி செயல் அலுவலலக்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மனுதாரர் தனது புகார் குறித்து ஆதார ஆவணங்களையும் தனது புகார் மனுவுடன் இணைத்தனுப்பியுள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு குறித்து வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 5.8.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் கடந்த 26.2.2021 முதல் தான் வலங்கைமான் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், மனுதாரர் திரு. என். சுவாமிநாதன் கடந்த 4.1.2021 அன்று வலங்கைமான் பேரூராட்சிக்குட்பட்ட இராமன்தோப்பு குட்டையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடக்கோரி அளித்த மனுவின் அடிப்படையில், 8.3.2021, 3.9.2021 மற்றும் 7.3.2022 ஆகிய தேதிகளில் ஆக்கிரமிப்புகள் தொடர்பாக முறையான அளவீடு செய்துதருமாறு வலங்கைமான் வட்டாட்சியரிடம் அறிக்கை கோரப்பட்டதென்றும், 20.5.2022 நாளிட்ட கடிதம் மூலம் வட்டாட்சியரது அறிக்கை பெறப்பட்டதெனவும், அதனைத் தொடர்ந்து ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமிப்புகளை தாங்களே அகற்றிகொள்ள நோட்டீஸ் மற்றும் இறுதி அறிவிப்பு கடிதம் என மூன்று முறை கடிதம் கொடுத்து அறிவுறுத்தப்பட்டனர் என்றும், ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமிப்புகளை தாங்களே அகற்றிட தவறியதன் அடிப்படையில், பேரூராட்சி நிர்வாகத்தின் மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்றிட நாளிதழ்களிலும் கெடு விதித்து தாங்களாகவே ஆக்கிரமிப்புகளை அகற்றிக்கொள்ள விளம்பரம் செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், அரசாணை எண்.540 வருவாய்த் துறை, நாள் 04.12.2014ன்படியும், தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் 1905ன்படியும், தமிழ்நாடு வருவாய் மீட்புச் சட்டம் 1864, பிரிவு 26–ன்படியும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்போது சட்டம் ஒழுங்கு பிரச்சனை எழ வாய்ப்புள்ளதால், வலங்கைமான் வட்டாட்சியர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோரது ஒத்துழைப்பு கோரப்பட்டதாகவும், ஆக்கிரமிப்புகளை அகற்றிட குறித்துரைக்கப்பட்ட தேதிகளில், நிர்வாக காரணங்களினால் வட்டாட்சியர் மற்றும் காவல் ஆய்வாளர் ஒத்துழைப்பு வழங்கிட இயலாத நிலையில், ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி நிலுவையில் உள்ளதென்றும், ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து முத்தரப்பு கூட்டம் நடத்தி, மறு தேதி நிர்ணயம் செய்து புதுத்தெரு (இராமன் தோப்பு குட்டை) ஆக்கிரமிப்புகளை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று தெரிவித்துள்ளார்.

3. இதனைத் தொடர்ந்து, வலங்கைமான் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட 16.8.2022 நாளிட்ட அறிக்கையில் வலங்கைமான் பேரூராட்சிக்குச் சொந்தமான ராமன்தோப்பு குட்டையில் (புதுத்தெரு குட்டை) இருந்த ஆக்கிரமிப்புகள் 13.8.2022 அன்று பேரூராட்சி நிர்வாகத்தினால் வட்டாட்சியர், வலங்கைமான், காவல்துறை துணை கண்காணிப்பாளர், நன்னிலம் மற்றும் காவல் ஆய்வாளர், வலங்கைமான் ஆகியோரை ஒருங்கிணைத்து அகற்றப்பட்டுள்ளன என்றும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டதற்கான

நாளிதழ் செய்தி மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றையும் தமது அறிக்கையுடன் இணைத்தனுப்பியுள்ளார்.

4. வலங்கைமான் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில், மனுதாரரால் அளிக்கப்பட்ட புகார் மனு நிறைவேற்றப்பட்ட நிலையில், வலங்கைமான் பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையின்மீது மனுதாரரின் குறிப்புரை இம்முறைமன்ற நடுவத்தினால் கோரப்பட்டது. மனுதாரர் திரு. என். சுவாமிநாதன் 25.8.2022 நாளிட்ட தமது கடிதத்தில் இராமன் தோப்புக் குட்டைக்குச் செல்லும் (வலங்கைமான் பேரூராட்சிக்கு பாத்தியப்பட்ட) அரசு புறம்போக்கு நீர்வழிப்பாதைகள் முழுமையாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன என்றும், அவை முறையே (a) சர்வே எண்.700/17– 0.00.39 ஏர் (b) சர்வே எண்.700/26– 0.01.09 ஏர்; (c) சர்வே எண்.700/28–0.00.32 ஏர் மற்றும் (d) சர்வே எண்.700/47 –0.01.10 ஏர் ஆகும். மேலும் குடமுருட்டி ஆற்றின் (காவிரிக்கிளை) வாய்க்கால் வழி உபரிநீர் வழிப்பாதையும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் தற்போது குட்டையைச் சுற்றி குப்பைகள் கொட்டுதல், கழிவுநீர் உபரி (சாக்கடைகள்) மற்றும் மலஜலக்கழிவுகள் நேரிடையாக குட்டையில் முன்னிலும் அதிகமாக கலக்கப்பட்டு பன்றிகளின் கூடாரமாக இருந்துவருகிறது என்றும், பேரூராட்சி நிர்வாகத்தின் அலட்சியப் போக்கினையே இது தெளிவுபடுத்துவதாகவும், தற்போது மழைக்காலம் நெருங்குவதால் பன்றிக்காய்ச்சல், சுவாசக் கோளாறுகள் ஏற்பட்டு பொதுமக்கள் துன்பத்திற்கு உள்ளாக வாய்ப்புள்ளது என்றும், குட்டையானது சுமார் 45 வருடங்கள்ாக சரிவர பராமரிக்காமல் (தூர்வாறப்படாமல்) பாசியுடன் கலந்த சாக்கடையாக மிகுந்த துர்நாற்றம் வீசும் நிலையில், பெயரளவில் கண்துடைப்பு நடவடிக்கையாக 13.8.2022 அன்று ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன என்று பேரூராட்சி நிர்வாகம் குறிப்பிடுவது உண்மைத் தன்மைற்ற செயல்பாடு என்றும், நிலஅளவை விவரங்கள் பழைய RSRபடி பயன்படுத்தவில்லை எனவும், மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் தடுப்புச்சுவர் வைக்கப்படாமல், பொதுவழிப்பாதைகள் ஆக்கிரமிப்புகள் அளவீடுகளை முறையாக வருவாய்த் துறை மூலம் பெறப்படாமல், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டதாக கூறியது முற்றிலும் தவறு என்றும், எனவே, முறையாக ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், நீர்வழிப்பாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை முற்றிலுமாக அகற்றிடவும், இனிவரும் காலங்களில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு உரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இராமன்தோப்புக் குட்டையில் சுகாதார சீர்கேடு ஏற்படாதவாறும், பன்றிகள் கூடாரமாக மாறாமல், கழிவுநீர் கலப்பதை தடுத்து முழுமையாக ஆக்கிரமிப்புகளை அகற்றிட உரிய விசாரணை மேற்கொண்டு உத்தரவிடுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பின்னர், குட்டையின் அவல நிலை குறித்த புகைப்பட நகல்களையும் மனுதாரர் தனது கடிதத்துடன் இணைத்தனுப்பியுள்ளார்.

5. மனுதாரர் மற்றும் வலங்கைமான் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், மேற்கண்ட புகார் மனு மீதான நேரடி விசாரணை 20.09.2022 அன்று உத்தேசிக்கப்பட்டு, மனுதாரர் மற்றும் வலங்கைமான் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு 12.9.2022அழைப்பாணைகள் அனுப்பிவைக்கப்பட்டன. மனுதாரர் திரு. என். சுவாமிநாதன் 20.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "வலங்கைமான் பேரூராட்சிக்குச் சொந்தமான இராமன்தோப்பு குட்டையில் (சர்வே எண்.700/21) உள்ள ஆக்கிரமிப்புகளை பாரபட்சமின்றி அகற்றிட

மாவட்ட ஆட்சியர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் வலங்கைமான் பேரூராட்சி நிர்வாகத்திற்கும் பல்வேறு மனுக்கள் அனுப்பியும் மேற்கண்ட இடத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட எவ்வித நடவடிக்கையும் முழுவதுமாக எடுக்கவில்லை. இம்முறைமன்ற நடுவத்தில் என்னால் அளிக்கப்பட்ட மனுவின் மீதான பதில் அறிக்கையில் மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன என்று பேரூராட்சி நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், நீர்வழிப்பாதைகளிலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை (சர்வே எண்.700/17, 700/26, 700/28 மற்றும் 700/47). மேலும், குடமுருட்டி ஆற்றின் வாய்க்கால் உபரிநீர் வழிப்பாதையிலும் ஆக்கிரமிப்புகள் உள்ளன. மேலும், தற்போது குட்டையைச் சுற்றி குப்பைகள் கொட்டுதல், கழிவுநீர் உபரி (சாக்கடைகள்) மற்றும் கழிவுகள் நேரிடையாக குட்டையில் முன்பைவிட அதிகமாக கலக்கப்பட்டு, பன்றிகள் மேயும் இடமாக மாறியுள்ளது. தற்போது மழைக்காலம் நெருங்குவதால் பன்றிக்காய்ச்சல், சுவாசக் கோளாறுகள் ஏற்பட்டு பொதுமக்கள் துன்பத்திற்கு ஆளாக வாய்ப்புள்ளது என்பதால், நீர்வழிப்பாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை முற்றிலுமாக அகற்றிட பேரூராட்சி நிர்வாகத்திற்கு உத்தரவிடக்கோரியும், ஆக்கிரமிப்பாளர்களால் கட்டப்பட்டுள்ள வீடுகளை முற்றிலுமாக அகற்றி, பேரூராட்சிக்குச் சொந்தமான இராமன் தோப்பு குட்டை மற்றும் நீர்வழிப்பாதைகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை முற்றிலுமாக அகற்றிடவும், இனிவரும் காலங்களில் ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்படாதவாறு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஆணை பிறப்பித்திடுமாறு இம்முறைமன்ற நடுவத்தினை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

6. வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. என்.சி. பரமேஸ்வரி மற்றும் இளநிலை உதவியாளர் திரு. ஆர். சீதாராமன் ஆகிய இருவரும் 20.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் "மனுதாரர் திரு. என். சுவாமிநாதன் என்பவர் இம்முறைமன்றத்திற்கு அளித்துள்ள மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இராமன்தோப்புக் குட்டை, வலங்கைமான் பேரூராட்சிக்கு உட்பட்டதாகும். மேற்கண்ட குட்டையைச் சுற்றி இருந்த ஆக்கிரமிப்புகள் கடந்த 13.8.2022 அன்று முற்றிலும் அகற்றப்பட்டுவிட்டன என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். எனினும், மனுதாரர் இன்று (20.9.2022) இம்முறைமன்றத்தில் குறிப்பிட்டுள்ள நீர்வழிப்பாதையை அளவீடு செய்து அதன் அறிக்கையை பேரூராட்சிக்கு அளிக்குமாறு வலங்கைமான் வட்டாட்சியருக்கு 13.9.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இன்னும் ஓரிரு நாட்களில் வருவாய்த் துறையை நானே நேரடியாக தொடர்புகொண்டு, மேற்கண்ட பாதையை அளவீடு செய்தும், அறிக்கையைப் பெற்று, காவல்துறையின் உதவியுடன் இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் ஆக்கிரமிப்புகளை அகற்றிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். இந்நேர்வு தொடர்பான எனது 19.9.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவுசெய்துகொள்ளும்படியும் இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

7. வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது 19.9.2022 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் திரு. என். சுவாமிநாதன் ராமன்தோப்பு குட்டைக்குச் செல்வதற்கான

நான்கு புல எண்களில் உள்ள பாதைகளில் ஆக்கிரமிப்புகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இப்புல எண்களில் ராமன்தோப்பு குட்டைக்குச் செல்லும் பாதையினை அளவீடு செய்துதரக்கோரி வலங்கைமான் வட்டாட்சியருக்கு 13.9.2022ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் அக்கடிதத்தின் நகலினையும், மனுதாரர் அளித்துள்ள புகார் குறித்து வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த ஆவண நகல்களையும் தனது அறிக்கையுடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

8. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை, வாக்குமூலம், வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட 19.09.2022 நாளிட்ட கூடுதல் அறிக்கை மற்றும் ஆவணங்கள், புகைப்படங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- பொதுச் சுகாதாரம் கோரி மனுதாரரால் முன்னெடுக்கப்பட்டுள்ள தொடர் நடவடிக்கைகள், அவற்றுக்கான ஆதாரங்கள், ஆக்கிரமிப்புகள் அகற்றம் குறித்து அவருக்குள்ள விழிப்புணர்வு ஆகியவற்றை அவரால் அளிக்கப்பட்டுள்ள புகார் மற்றும் ஆதார ஆவணங்களின்படி தெளிவாக இம்முறைமன்ற நடுவம் அறிவதோடு, பொது மக்கள் தொடர்புடைய கூட்டு நடவடிக்கைகளில், மனுதாரர் தம்மை முன்நிலைப்படுத்திக்கொண்டு மேற்கொண்டுள்ள முயற்சியை தெளிவாகக் காணுவதுடன், மனுதாரரின் முயற்சியை இம்முறைமன்ற நடுவம் பாராட்டவும் விழைகிறது.
- அதேபோன்று, வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலராக 2/2021ல் பொறுப்பேற்றுள்ள செயல் அலுவலர் மனுதாரரின் புகார் மனுவினைத் தொடர்ந்து, ஆக்கிரமிப்புகளை அகற்றிட மேற்கொண்டுள்ள முயற்சிகள் மற்றும் அதன் தொடர்பாக அவரால் எழுதப்பட்ட கடிதங்கள், அறிவிப்புகள், புகைப்படங்கள் ஆகியவற்றையும் காணும்போது குறுகிய காலத்தில் செயல் அலுவலரால் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளையும் இம்முறைமன்ற நடுவம் பாராட்ட கடமைப்பட்டுள்ளது.
- ஆக்கிரமிப்புகள் அகற்றம் என்பது ஒரு கூட்டு நடவடிக்கை என்பதாலும், ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் மேற்கொள்ளப்படவேண்டிய வழிமுறைகளை கையாள்வதும், சட்டம் ஒழுங்கு பிரச்சனை எழாதவாறு வருவாய் மற்றும் காவல் துறையின் உதவியுடன் மேற்கொள்ளப்படவேண்டிய செயல் என்பதால், கால அவகாசம் கோரியுள்ளதும் ஏற்கத்தக்கதென இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது
- வலங்கைமான் பேரூராட்சி நிர்வாகத்தினால் இராமன்தோப்பு குட்டையில் இருந்த ஆக்கிரமிப்புகள் உரிய வழிமுறைகளின்படி 13.8.2022 அன்று அகற்றப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. அதேவேளையில், மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இராமன்தோப்பு குட்டைக்குச் செல்லும் நீர்வழிப்பாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளையும், ஏனைய நீர்வழிப்பாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் முற்றிலுமாக அகற்றுவது பேரூராட்சியின் கடமையாகும்.

- இவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றிட வலங்கைமான் வட்டாட்சியருக்கு 13.9.2022ல் அளவீடு செய்துதர கோரப்பட்டு, வட்டாட்சியரின் அறிக்கை எதிர்பார்க்கப்பட்டு வருவதாகவும், இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகியுள்ள வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தானே நேரில் சென்று இன்னும் ஓரிரு நாட்களில் வட்டாட்சியரது அறிக்கையைப் பெற்றிடவும், அதனைத் தொடர்ந்து கூட்டு முயற்சியின் முலம் வருவாய் மற்றும் காவல்துறை ஒருங்கிணைப்புடன் எஞ்சிய ஆக்கிரமிப்புகளும், நீர்வழிப்பாதை ஆக்கிரமிப்புகளையும் அகற்றிட பேரூராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

- மனுதாரர் பொதுநலன் கருதி ஆக்கிரமிப்புகளை அகற்றிட மேற்கொண்டுள்ள முயற்சியின் பயனாக ஒரு பகுதி ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ள நிலையில், அவரது 25.8.2022 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் குடமுருட்டி ஆற்றின் வாய்க்கால்வழி உபரிநீர் வழிப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு பேரூராட்சி நிர்வாகத்துடன் இணைந்து ஒத்துழைப்பினை அளித்திடவும், நீர்வழிப்பாதைகளை கண்டறிந்திட ஏதுவாக தம்மிடமுள்ள ஆவண நகல்களை பேரூராட்சி நிர்வாகத்திற்கு வழங்கிடுவதும் அவசியமாகும் என்பதையும் இம்முறைமன்ற நடுவம் வலியுறுத்துகிறது.

5. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் பேரூராட்சிக்குட்பட்ட இராமன்தோப்பு குட்டையில் இருந்த ஆக்கிரமிப்புகள் பேரூராட்சி நிர்வாகத்தினால் அகற்றப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட இராமன்தோப்பு குட்டைக்குச் செல்லும் நீர்வழிப்பாதைகள் சர்வே எண்.700/17, 700/26, 700/28 மற்றும் 700/47ல் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், குடமுருட்டி ஆற்றின் (காவிரிக்கிளை) வாய்க்கால் வழி உபரிநீர் வழிப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்றிடவேண்டிய அவசியத்தையும், அதேபோல பேரூராட்சி நிர்வாகம் ஆக்கிரமிப்புகளை அகற்றும்போது திருக்கோயில் நிர்வாகத்தையும் ஒருங்கிணைத்து ஆக்கிரமிப்புகளை முற்றிலுமாக அகற்றிடவேண்டுமென மனுதாரரால் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையின்போது கேட்டுக்கொள்ளப்பட்டு, அதன் ஒரு பகுதியாக மனுதாரரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மேற்கண்ட சர்வே எண்களில் அமைந்துள்ள நீர்வழிப்பாதைகளை அளந்து அத்துமால் செய்துதர வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் 13.9.2022 அன்று வலங்கைமான் வட்டாட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால், பேரூராட்சி நிர்வாகம் மற்றும் திருக்கோயில் நிர்வாகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து எஞ்சிய ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருங்கிணைந்த குழு ஒன்றினை அமைத்தும், நீர்வழிப்பாதைகளை அளந்து பேரூராட்சிக்குச் சொந்தமான இடங்களை அளந்து அத்துமால் செய்திடவும், கோயில் நிர்வாகத்தின் நடவடிக்கையால் ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்பட்டிருந்தால் அவற்றையும் அகற்றி, இராமன் தோப்பு குட்டையில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆக்கிரமிப்புகளை முற்றிலுமாக அகற்றி இனிவரும் காலங்களில் ஆக்கிரமிப்புகள் ஏதும் அப்பகுதியில் ஏற்படாதவாறும், சுகாதார சீர்கேடுகள் ஏதும் ஏற்படாமல், பொது சுகாதாரத்திற்கு ஒத்துழைப்பு அளித்திட உரிய துரிதகால நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தங்களை வழங்கிடவும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்வரை ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை

காவல் மற்றும் வருவாய்த் துறையுடன் இணைந்து மேற்கொள்ள அனைத்து துறையினருக்கும் அறிவுறுத்தங்களை வழங்கி, இதனை கண்காணித்திடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார். நீர்நிலை ஆக்கிரமிப்புகள் முற்றிலுமாக அகற்றப்படவேண்டியதன் அவசியம் குறித்து நீதிமன்றங்கள் எச்சரிக்கை விடுத்துவரும் நிலையில், வலங்கைமான் பேரூராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு காவல்துறையின் ஒருங்கிணைப்பும் வருவாய் மற்றும் திருக்கோயில் நிர்வாகமும் முழு ஒத்துழைப்பு அளித்து எஞ்சிய ஆக்கிரமிப்புகளை இரண்டுமாத காலத்திற்குள் அகற்றிட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடப்படுகிறது. இப்பணிகளை கண்காணித்து பேரூராட்சிக்குச் சொந்தமான இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் முற்றிலுமாக அகற்றப்பட்டுள்ளது குறித்த அறிக்கையினை பேரூராட்சிகளின் ஆணையாளருக்கும், இம்முறைமன்ற நடுவத்திற்கும் அனுப்பிவைக்குமாறு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 24ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/- x x x x x x

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. N. சுவாமிநாதன், 14/43, கும்பகோணம் ரோடு, வலங்கைமான் (அஞ்சல்),
திருவாரூர் மாவட்டம்–612804

செயல் அலுவலர், வலங்கைமான் தேர்வுநிலை பேரூராட்சி, வலங்கைமான்,
திருவாரூர் மாவட்டம்–612 804

மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம், திருவாரூர்.

மாவட்ட வருவாய் அலுவலர், திருவாரூர் மாவட்டம், திருவாரூர்.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர்

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

28/9/22

செயலாளர்

28.9.22